# *14.* குகசம்பு.

*அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.*

**பு**கழ்மலி சண்பையி லும்பரும் புகழவி ருந்தரு ளுண்டவேள்
திகழ்மறை மந்திர வந்தரந் திரிபுடை யொன்றொடி ரண்டெனாப்
புகறலொ ழிந்துள டங்கிடும் பொறைமவு னம்பிடி யென்றுதந்
துகளறு தொண்டர்சு கம்பெறச் சொனதில்வை யென்குக சம்புவே. 1

**வ**சுதைதொ டங்கிய ருஞ்சிவம் வரைசது வொன்பது மின்றியொண்
சுசிசுட ருஞ்சிவ நின்றிடுந் துவிதம கன்றதி லொன்றுதல்
உசிதவ ருஞ்சிவ மென்றுநன் குறுமரு ணந்திப கர்ந்ததிற்
கசிவுடை யென்றனை யென்றும்வை களிகிள ரென்குக சம்புவே. 2

**அ**வதித ருந்தளை யைந்தையு மகலவ யர்ந்தவர் துன்பறு
சிவமென நின்றன ரென்றுரன் றெவுடிரு மந்திர வந்தணர்
நுவனிலை கொண்டுய வன்புசெய் நுழையில்சி தம்பர வங்கணன்
பவமற வன்றரு டந்ததண் பரிவுடை யென்குக சம்புவே. 3

**எ**னதொழில் கொண்டுக றங்கினு மிறையரு ளின்பரு ளஞ்சிகாக்
கனமவு னந்தனி லென்றுபேய்க் கனன்மது ரந்தர வுண்டகோன்
சொனதுரி யந்தனி னின்றொரு சுகமடை யும்படி யின்றெனை
மனதுக னிந்துக லந்திடாய் வரர்பர சென்குக சம்புவே. 4

**ம**லமழி வின்றிய ருந்திரு மறைபுக ழும்பதி யென்பதிற்
கலவலி கந்தவொர் தந்திர கதிவர லென்றெனை வஞ்சிர
மலையர னின்பெயர் கொண்டுளோன் மனதுக னிந்துமொ ழிந்தவந்
நலனுற வின்றுக லந்தரு ணவிலரு மென்குக சம்புவே. 5

---

2. **வசுதை** = மண்ணுலகு; **பி - நிகண்டு.** இது, பிருதிவி தத்துவம்.

3. **தெவுளல்** = பெருகல். **மந்திரவந்தணர்** = **திருமந்திரமுனிவர்.** (திருமூலநாயனார்) **நுழை** = நுண்மை, ஈனம்.

4. 'இன்பருளம்' என்பதை, இன்பர் + உளம் எனப் பிரித்துகொள்க.

5. **கலவல்** = கலத்தல்; **பி - நிகண்டு.**

**உ**ருவெளி யாம்படி யோங்கிய வொருவனி ரந்தர வின்பினை
மருவியி மாண்பய னீண்டெவர் மருவுவ ரென்றுளி ரங்குதல்
பெருகிய வான்சுக வீங்கலிற் பிரிவற விங்கெனை நன்குவை
கருணையி னீண்டம காம்பரக் களிகிள ரென்குக சம்புவே. 6

**நீ**யெனை நற்புரி வான்முனர் நிகழுரு வங்கொடு வந்துநல்
நேயம தர்ப்புற வேசொன நிலைநனி நின்றுப யன்பெறத்
தாயினு மிக்கத யாவினைத் தருவது முன்கட னுன்கடன்
தூயவ ருட்கரு வூலமே சுபகர வென்குக சம்புவே. 7

**நா**ல்வர்ந டுப்படி நின்றிது நாள்வரை யின்புய ருஞ்சுகஞ்
சால்கதி பெற்றுள ரன்பது தாழ்வற விங்கெனை மண்டினுன்
பால்வதி யத்தடை யென்கொலென் பாலதை நெஞ்சமு கந்தருள்
நூல்கடு திக்கவ யங்குமோர் நூனமி லென்குக சம்புவே. 8

**சி**ந்தையி றந்துசி றந்தவர் சென்றவ ரம்புணு ழைந்துவெம்
பந்தம கன்றிட வென்றுனும் பண்புடை நெஞ்சம டங்கலும்
எந்தைக ளென்றுகு ரங்குமன் பென்பதை யுந்தர லுன்கடன்
அந்தமி லந்தணர் சந்தத மன்புசெ யென்குக சம்புவே. 9

**அ**சைவறு நன்மவு னந்தனி லமரென லும்பொரு ளொன்றுமா
திசையொட றிந்தில னென்றுசெந் திருவுள நம்பந டந்துளோன்
வசையற மண்டிய வின்புழை வழிபடு மென்றனை யுந்தளை
பசையருண் மைந்தர்க ளெங்கணும் பரவிடு மென்குக சம்புவே. 10